# சங்க இலக்கியத்தில் நற்றாயின் பார்வை

# Natha is View on Sangam Literature

**ஜோ. சாந்தமூர்த்தி**
*முனைவர் பட்ட ஆய்வாளர்*
*தமிழியல்துறை*
*அண்ணாமலைப் பல்கலைக்கழகம்*
*அண்ணாமலை நகர்*

**J. Santhamoorthy**
*Ph.D., Research Scholar, Department of Tamil*
*Annamalai University*
*Annamalainagar*

**ஆய்வுச் சுருக்கம்**

*தமிழ் இலக்கியத்தில் மிகபெரும் இடத்தை பெற்றிருப்பது சங்க இலக்கியம் என்று கூறப்படுகிறது. இவ்விலக்கியம் தொகை எட்டும், பாட்டு பத்துமாக பகுக்கப்பட்டுள்ளது. அவற்றுள் அக இலக்கியமான எட்டுத்தொகையில் இல்லற வாழ்வியல் நெறிகளை கூறும் வகையில் அமைந்துள்ளது. இவற்றுள் நல் என்றதாய் பெண் மாந்தர்களுள் ஒருவரான நற்றாய் குழந்தையை பெற்றவள் என்ற அடையாளத்தை பெறுகின்றாள், தாய்மை என்ற பண்புடையவள் ஆவாள். இவளை தவிர மற்றொரு தாயான செவிலி ஆவாள் பெண் மாந்தர்களில் சிறப்பானவள் என்று செவிலியை போற்றுகின்றனர். குழந்தையை வளர்ப்பதில் இருந்து நன்மை, தீமை என அனைத்தையும் சொல்லி வளர்ப்பவள் செவிலி ஆகும். செவித்தாய் குழந்தைக்கு பால் ஊட்டி சீராட்சி வளர்த்தும் அதிக அக்கறையுடன் கவனித்துக் கொள்வது செவிலித்தாயின் பண்பாகும். இவையே நற்றாய்க்கும் பொருந்தும் என்கிறார் தொல்காப்பியர்.தலைவிதக்கபருவம்எய்தியவுடன், கற்பு காலத்தில் தன் மகள் இல்லறத்தை நல்லறமாக நடத்தி வருகிறாள் என்பதை அறிந்த செவிலி*

**Abstract**

*Sangha Literature occupies a very large place in tamil literature in this book. The sum is eight and the song in ten pivided. Among them is domastic life in the literary octave it is meant to repersent resources. Among these the epithet Nal Road is called Nattrai. One of the femal Manthars, Nattai gets the epithet of Childbearing. She has the characteristc of motherhood. Apart fram her another mother, sevili. The ladies admie those you are the pest nurse. It is the nurse who tells everything from the pras and cons of raisinga child. The nurse is the one who caw most for the rearing of the marmmal. Tolkappiyar says that are the same for Nattai. The heroine has well-seesoned body, she condicts her son's household well during the period of of chastity knowing this, the rurse tells Natai and is happy.*

**Keywords:**

*Sangha Literature, Nattrai, Femal Manthars, Tolkappiyar, Sevili*

*நற்றாய்க்கு கூறி மகிழ்கிறாள். அதனை கேட்ட நற்றாய் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றாள். இதனை பற்றி சங்க இலக்கியத்தில் அதிகம் பேசப்படுகிறது.*

***முக்கியச் சொற்கள்:***
*சங்க இலக்கியம், நற்றாய், செவிலி, தொல்காப்பியம், கற்பு காலம்.*

**Citation**

Santhamoorthy, J. “Natha is View on Sangam Literature.” *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 2, 2022, pp. 11–20.

*உலக வழக்கும், நாடக வழக்கும், புனைந்து படைக்கப்பட்ட இலக்கியம் சங்க அகப்பாடல்கள் மாந்தர்களின் கூற்றுகளாக பகுக்கப்பட்டு, பாடுபொருளின் அடிப்படையில் துறைகளாக வரையறை படுத்தப்பட்டன. தன் மகள் மீது கொண்டிருக்கும் தாயினுடைய அன்பின் அளவின்மையை நற்றாய் கூற்றுப் பாடல்களில் அறிய முடிகின்றது. பொதுவாக தாயாரைக் களவு, கற்பு என இருநிலையில் நோக்கும் பொழுது களவில் வரும் தாய் கண்டிப்பினை மிகுதியாக உடையவளாகவும் கற்பில் வரும் தாய் அக்கண்டிப்பினை எண்ணி தன்னையே கடிந்து கொள்பவளாகவும் காணப்படுகின்றாள். அன்பை புறக்கணிப்பவரிடமும் அன்பு செலுத்தும் அன்பின் உயர்படித் தத்துவத்தை விளக்கும் பன்பின் உருவமே தாய். வைதாலும், வாழ்த்தினாலும் அத்தாய்மைப் பண்பு மாறுவதில்லை. இதுவே அக இலக்கியம் காட்டும் தாய்மை, என்று இந்திராணி மணியன் சிறப்பிக்கின்றார்.*

*மேலும் தலைவி அவள் விரும்பிய அடவனை மனந்து கொள்ள வேண்டுமென்ற நற்றாய் விரும்புகின்றாள். ஆனால் அவள் மனந்து கொள்வதற்கு மேற்கொண்ட வழிமுறையையே தாய் வெறுக்கின்றாள். தன்னிடம் கூறாது சுரவழியில் உடன் போக்கு மேற்கொண்டு துன்புறுகின்றாளே என்று எண்ணிய நற்றாய் வருத்தப்படுகின்றாள். அவள் கூற்றில் தன்னிடம் தலைவி கூறியிருந்தால் சுற்றும் சூழத் தலைவனுக்கே அவளை மணம் முடித்து வைத்திருக்கலாம் எனும் ஆதங்கம் வெளிப்படுகின்றது. எனவே தனக்குப் பிடித்தவளை மகள் மணப்பதிலோ அவளை மனைப்படுத்துவதிலோ நற்றாய் தடையாக இருக்கமாட்டாள். தமக்குப் பிடித்தவனைத்தான் தம்மகள் பிடித்தவனாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் துன்பம் செய்ய மாட்டாள். இஃது அகத்திணை இலக்கியம் காட்டும் நற்றாயின் சிறப்பாகும்.*

*தாய் சொற்பொருள்*

*தாய் என்ற சொல் குழந்தைகளை ஈன்று எடுத்தவளை குறிக்கும் சொல்லாகும். தாய்மைப் பண்புடைய சிலர் தாய்மை அடைமொழி சேர்த்தே வழங்கப்படுகின்றனர். செவிலித்தாய் வளர்ப்புத்தாய் போன்ற பெயர்களால் அறியலாம். ஒரு குழந்தையைத் தந்த பிறகே தாய் ஆகின்றாளாதலின் தர தருதல் அதாவது குழந்தையைத் தருதல் என்று அடிப்படைச் சொல் யகர விகுதி பெற்றுத் தாய் என்று வந்திருக்கலாம் என்பர்.*

*தொல்காப்பியர் குழந்தையைப் பெற்றவளை நல் என்ற அடைமொழியோடு நற்றாய் என்கிறார். குழந்தையை வளர்ப்பவள் செவிலித்தாய் எனப்படுகின்றாள். என இருவரை தாயாக குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். மேலும்,*

“***அம்பொற் கொம்பின் ஆயிழை ஐவர் நலன் ஓம்ப***”[1]

*என்று சீவக சிந்தாமணியில் ஒரு செய்யுள்ட அடி இடம் பெற்றுள்ளது. இப்பாடலடிக்கு அழகிய பொற்கலன் அணிந்த கொடி போன்ற தாய்மார் ஐவர் எல்லா நலன்களையும் போற்றிக் காக்க என உரை எழுதியுள்ளார் நச்சினார்க்கினியார். மேலும் அவள் தாய்மார் வகைகளை விளக்குமிடத்து ஆட்டுவாள், ஊட்டுவாள், ஏலுறுத்துவாள் நெரடி பயிற்றுவாள், கைத்தாய் என ஐவர் தாயார் உள்ளனர் என விளக்குகின்றார்.*

“***குடிமுதற் சுற்றமும் குற்றினை யோரும்***
***அடியயோர் பாங்கும் ஆயமும் நீங்கி***”[2]

*என்ற பாடல் அடிகளில் அடியோர் பங்கு என்பதற்கு செவிலித்தாய் முதலிய ஐவர் என அடியோர்க்கு நல்லார் உரை உணர்த்துகிறது.*

*அகத்திணைக்குத் தலைவன், தலைவி எனப் பெயர் இடம் பெற்றாலும், அகத்தலைமைப் பெண்ணுக்கே உரியது. புறத் தலைமையுடைய ஆடவன் இல்லத் தலைமையையும் உடன் கொள்வது ஒத்துவராது. மகவைப் பெறும் பெண்ணினத்துக்கு குடும்பத்தைச் சுமக்கும் பொறுப்பு உரியது. செவிலியும், நற்றாயும் தலைவியின் நல்வாழ்விற்காக வாழ்பவர்கள் இந்நிலையில் அகத்திணை பற்றிய ஒழுக்கங்களைக் கூறும் நிலையில் தாயின் பங்கு மிகவும் இன்றியமையாத ஒன்றாகிறது.*

**தாயின் கோட்பாடு**

*தமிழ் இலாக்கிய வரலாற்றில் தொல்காப்பியத்தைத் தொடக்கமாக கொண்டதால் தாய் பற்றிய அகமரபுகளைப் பல்வேறு இலக்கிழயங்கள் எடுத்துரைக்கின்றன. தமிழில் வளர்ந்துள்ள ஐந்திலக்கண நூல்கள் யாவும் தொல்காப்பிய மரபை அடிபொற்றியே எழுதப் பெற்றுள்ளவையாகும். இவற்றில் காணப்படும் மாற்றங்கள் யாவும் தொல்காப்பிய மரபின் வளர்ச்சியாகவே அமைந்துள்ளன. பிறப்பு, மதம், இனம், முதலிய வேற்றுமைகளைப் பாராட்டாமல் போர், வெற்றி, காதல், உணர்ச்சி போன்றவற்றை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் அறிய நூலாகும்.*

*பொருளதிகாரத்தில் அகத்திணை இலக்கணங்களை அகத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல் என்று நான்கு இயல்புகளாகப் பிரித்துத்தாய் பற்றிய கருத்துகளை விளக்குகின்றார். தொல்காப்பியத்தில் தாய் அகத்திணை மாந்தருள் முதன்மையாகக் காணப்படுகின்றாள். தாய் நிலை குறித்து தொல்காப்பியம் இரண்டு வகையாகக் கூறுகிறது. காரணம் அகத்திணை மாந்தர்கள் தோழி தலைவி, போன்றோர் அனைவரும் தாய் என்ற நிலையை எய்தப் பெற்றவர்கள் மற்றும் எய்த போகிறார்கள்தான். அதனால் தன் இவ்விரு வகை தாயாருள் களவில் செவிலி சிறப்பிடம் பெறுகிறாள். அறத்தொடு நிற்றலும் நற்றாய் இன்றியமையாதவள் ஆகின்றாள். களவில் பின்னரே அறத்தொடு நிற்றல் நிகழும் இக்களவொழுக்கம் அகத்திணைக்கு உயிர் போன்றதாகும்.*

*தாயின் உயிரியக் கோட்பாடானது குழந்தை வளர்ப்பிலும், அது வளரந்து பருவம் எய்துவறதகுள் அதனின் நலனில் அதிகம் அக்கறை காட்டும் தன்மையை உடையவள் என்கிறார். தொல்காப்பியர். இவர் தாய் என்ற ஒரு சொல்லைப் பொதுவாகக் கொண்டு நற்றாயையும், செவிலித்தாயையும் குறிப்பதாக உள்ளது என்பதை,*

***"தாய் அறிவுறுதல் செவிலியோ டொக்கும்"[4]***

*என்ற நூற்பாவின் வழி அறியமுடிகிறது. எனவே இந்நூற்பாவில் தாய் என்பது தலைவியை ஈன்ற தாயான நற்றாயைக் குறிக்க வந்தது என்றும் இதனை,*

***"தாய்நிலை கண்டு"[5]***

*என்ற அடிகள் மூலமாக தாய் என்பதற்கு நற்றாய், செவிலித்தாயைக் குறிப்பிடுவதை உரையாசிரியர்கள் வழி அறிய முடிகின்றது. தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கண நூல்களிலும் அக இலக்கியங்களிலும் பெற்றுத் தாயைக் காட்டிலும் வளர்ப்புத் தாயே குழந்தையின் மீது அதிக அக்கரைக் காட்டியுள்ளதை அறிய முடிகிறது.*

**தாயின் சிறப்பு**

*தாய் என்ற சொல்லுக்கு நிகரான வேறு சொல் தமிழில் இல்லை.*

***"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"[6]***

***"தாயிற் சிறந்த தொரு கோயிலும் இல்லை"[7]***

*என்ற ஔவையின் அமுதப் பாடல்கள் தொண்டுதொட்டு இன்றுவரை தாயைத் தெய்வமாக வைத்து வழிபட்டு வருவது நம் பண்பாடாகும். மேலும் தாயின் தனிச்சிறப்பை*

***"முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள்சுமந்து***
***அந்திபக லாய் என்னை ஆதரித்து தொந்தி***
***சரியச் சுமந்து பெற்ற தாய்"[8]***

*எனப் பாராட்டுவோர் பட்டினத்துப் பிள்ளையார்.*

*ஒவ்வொரு வீட்டிலும் தன்னுடைய சிரமத்தைக் குறைக்கத் தனக்குப் பதிலாகத் தாயைப் படைத்தார் கடவுள் என்பது தமிழரின் நம்பிக்கை. பெண்மையின் பெருஞ்சிறப்பு தாய்மைப் பகுதியில் தான் உள்ளது. ஒரு பெண் இளமையில் பெற்றோரைச் சார்ந்தும் தாய்மையில் முழுமையும் பெறுகிறாள்.*

*எனவே தாய்மை வாழ்வு என்பது தியாக வாழ்வாகின்றது. தனக்கென எதுவுமின்றிப் பிறர் வாழ்வே வாழ்வாகக் கொள்ளும் வாழ்வாகின்றது. குழந்தை பிறந்து வளரும் போது முதற்கண் தாயைத்தான் அறிகின்றது. அம்மா என்றுதான் முதலில் அழைக்கின்றது. பிறகு தன் தாய் காட்ட தந்தையை அறிகின்றது. குழந்தை பசியால் அழவேண்டியதில்லை எப்போது அதற்குப் பாலூட்டும் கடமை உணர்வு உடையவள் நற்றாய். இக்காரணம் பற்றியே பால் நினைத்து ஊட்டும் தாயை இறைவனுக்கு உவமை கூறினார். மணிவாசக அடிகள், ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நோகச் சுமந்து பெற்று மகளைப் பாலூட்டித் தாலாட்டிச் சீராட்டி வளர்பதிலேயே தனி இன்பம் காணும் தாயை இலக்கிய உலகம் பெருமளவு வைத்துப் போற்றுகின்றது.*

*சமுதாயம் மக்களைச் சுற்றியே அமைந்துள்ளது. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் தாயின் பங்கு இன்றியமையாததாகின்றது. குழந்தையைப் பெறுவதோடு தாயின் பங்கு தீர்ந்து விடவில்லை. அதைப் பேணி வளர்ப்பதும் அவள் கடமை ஆகின்றது. தாயின் பொறுப்பைக் கடன், கடமை என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார் பொன்முடியார்.*

***"ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே"[9]***

*என்ற புறநானூற்று பாடல் அடிகள் வழி அறிய முடிகிறது. மக்களை நல்லவராய் வல்லவராய் ஆக்கும் பெரும்பணி தாயினுடையது. எனவே சமுதாய ஆக்கத்திற்குத் தாய் மிகவும் இன்றியமையாததாகின்றது என்பது உணரத்தக்கது.*

**மரபு**

*மரபினோர் என்னும் சொல்லுக்கு வழித் தோன்றியோர் என்பது பொருள் ஆகும். மரபு என்னும் சொல்லுக்கு முறைமை சான்றோரின் சொல் வழக்குறை, பாரம்பரியம், நல்நொழுக்கம், மேம்பாடு, வழிபாடு, பருவம். என்னும் பொருள்கள் குறிப்பிடப்படுகின்றன. வழி வழியாக நம் முன்னோர் பின்பற்றி வரும் முறையே மரபு எனப்படும். கொடுப்பக் கொள்ளுதல் என்னும் முறை எல்லார் நெஞ்சத்தும் இயல்பாகப் பதிந்துக் கிடந்தன. எனவே மக்கட்கு மனஞ்செய்து வைப்பதைப் பெற்றோர்கள் தம் இல்லரக் கடமையாகக் கொண்டார். அன்புடைத் தாய் தம்மகன் நல்வாழ்வு வாழ வேண்டும் என்றே என்னுபவள் தாய். இவ்வாறு வழிவழியாக பின் வரும் செயல்களை நாம் மரபு என்கிறோம்.*

**முன்னோர் மரபு**

*பழந்தமிழர் ஒழுக்கத்தையே வலியுறுத்தி வாழ்ந்தனர் உயிரியல் என்பது ஒரு நெறியன்று. உயிர்கள் அடைவதற்கு உரிய இறுதி நிலையாகும். அதனை அடைவதற்குத் தக்க நெறிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு இல்லற குடும்பக் கடமைகள் பொருளீட்டி வறியார்க்கும் உற்றார்க்கும் ஈதல் கண்ணோட்டம் மனம், வாய்,மெய்த்தூய்மை, நாட்டுக்கடமை புகழ்பேறு போன்றவைகளாகும். எனவே பிற்காலத்தில் வரும் சந்ததிகள் பிற சந்ததிகளோடு சிறந்து வாழ்வதற்குரிய நெறிகளாக நம் முன்னோர்கள் வித்திட்ட நெறிகளைக் காலந்தோறும் பின்பற்றி வாழும் முறைகளை நாம் இன்றளவும் கையாண்டு வருகின்றோம். இந்நிலையில் முன்னோர் வித்திட்ட நெறிகளையும், பழக்கவழக்கங்களையும். பழஞ்செய்யுள்களின் வழியாகும். அவர்கள் சொல்லிய சொற்றொடர்களின் மூலமாக மரபுகளையும் கருத்துகளையும் போற்றி வருகின்றனர் எனலாம்.*

*தொல்காப்பியர் முந்நூலின் தன்மையை அறிந்தே இலக்கணம் படைத்தார் என்பதைத் தொல்காப்பியப் பாயிரத்தின் வழியாக அறிய முடிகின்றது. மேலும் நூற்பாக்களில் பயின்று வருகின்ற எழுதிணை என்பரம்பனார் புலவர் மொழி அறிந்திேனாரே பாடலும் பயின்றவை. மொழிப் புலன் நன்குணர்ந்த புலமையரே, நாடுங்காலை என்ற தொடர்களிலிருந்து தொல்காப்பியத்திற்கு முன்பு பல நூல்கள் இருந்தன. அந்நூல்களின் செய்திகளைத் தொல்காப்பியம் தழுவிக் காத்து நிற்கும் வழிநிலையும் எளிதில் விளக்கும். இந்நிலையில் தமக்குக் கிடைத்திட்ட முதன்மை இலக்கண நூலான தொல்காப்பியத்தின் வழி மரபு பற்றிய செய்திகளை அறிந்து கொள்ளலாம்.*

*இருதிணைப்பெரும் குணமாகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றி வரலாற்று முறைமையும் உயர்திணை நான்கு பற்றிய மரபும், அஃறிணைப் புள்ளும் மரபினும் பற்றிய மரபும் அவை பற்றிவரும் உலகியல் மரபும் நூல் மரபும் என இவையெல்லாம் மரபெனப்படும் என்று விளக்குவார் பேராசிரியர் இதனை.*

***“மரபே தானும்***
***நாற்சொல் லியலான் யாப்புவழிப் பட்டன்று”***[10]

*என்று தொல்காப்பியர் உணர்த்துகின்றார். மரபு வழியாக வந்த சொல் என்பது இயற்சொல், திரிச்சொல், திசைச்சொல், வடச்சொல் என்னும் நாற்சொல்லின் இயற்கையான யாப்பின் வழிப்பட்டது என்பதாகும்.*

*மரபு என்பது யாதொரு பொருளை யாரொரு சொல்லால் யாதொரு நெறியால் அறிவுடையார் சொன்னார்களோ அப்படிச் சொல்லுதல் மரபாகும் என்னும் மரபானது தந்தை மரபு தாய் மரபு என்னும் கொள்ளப்பெறும் என்பார் ஐ. சிங்காரவேலு.*

*எனவே மரபு பற்றிய விளக்கங்கள் கூறப்பட்ட நிலையில் தாய் பற்றிய மரபுகளைக் காண்பது சிறந்ததாகும். மரபு முறை அகத்திணைக் கண் ஒரு துறையாகப் பேசப்படுவதில்லை. இலக்கியப்படுத்தற்கு வேண்டும் உணர்ச்சிக் கூறு அதற்கு இல்லை என்று கூடக் கூறலாம்.*

*தமிழிலக்கியங்களில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய உறுதிப் பொருள்கள் நிறைந்து காணப்படினும் இன்பம் மட்டுமே அகவாழ்க்கைக்கு இன்றியமையாததாக விளக்குகிறது. அதே*

*போன்று பொருளை அறவழியில் பெறுவதே சிறந்தது எனவும் கருதினார். அறமும் அறத்தின் வழிபெற்ற பொருளால் கிடைக்கின்ற இன்பமுமே அகவாழ்வின் பயனாகக் கருதப்பட்டது. இவ்வகை நெறியில் நின்று பல்லாற்றலுடன் நன்கு வாழ்தல் வேண்டும். என்பதையே தமிழினம் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு வருகிறது. இதையே வருங்கால சந்ததியினரும் பின்பற்ற வேண்டும். அதனால் தான் அதை மரபாகவும், இலக்கணமாகவும் வகுத்துள்ளனர்.*

*மகளின் நடத்தைக்கு தாயே வழிகாட்டி ஆகவே தவறு வந்தால் இவள் வளர்த்த அழகு அது என்று ஊரார் தாய் மீது பழிசுமத்தக் காணலாம். அது கேட்டு அன்னை வெட்டகப்படுவாளோ அன்றி பொறுப்புத் தனக்கில்லை என்னு தட்டிக்கழிக்கமாட்டாள். ஊர் மாதர்கள் இன்னவள் மகள் என்று தாயைச்சுட்டி மகளைச் சுட்டுவது தான் நம் சமுதாய மரபாக உள்ளது.*

*தாய் மகனின் முன் வந்தும் ஊரினர் அலர் கூறுவராதலின் மகள் களவொழுக்கத்தால் மனங்கசப்பவளும் கொதிப்பளும் தாயே ஆவாள். தன் போக்கைத் தாயே அறிந்து கொள்ளட்டும். இது பற்றி தமக்கென்ன கவலை என்று அதிகம் பேசுகின்ற ஊர்ப்பெண்டுகள் ஒரு நாள் இரு நாள் அல்ல பல நாள் வந்து என்னிடம் என் மகள் பற்றிச் சொல்கிறார்கள். யானோ அவளிடம் அது பற்றி ஒன்றும் வாய்திறப்பதில்லை எதுவும் கேட்கப்பெறின் நாணம் அவளைக் கொல்லும் ஆதலினால் ஊரார் சொல்லும் செய்தியை மிகவும் மறைத்து வைத்துக் கொள்கிறேன். என்கிறாள் இதனை,*

***“உவக்குநள் ஆயினும் உடலுநள் ஆயினும்***
***யாய் அறிந்து உணர்க என்னார் தீவாய்***
***அலர்வினை மேவல் அம்பல் பெண்டீர்***
***எனக்குவந்து உரைப்பவும்***
***தனக்கு உரைப்பு அறியேன்***
***நாணுவாள் இவள் என நணிகரத்து உறையும்”***[11]

*என் அகநானூற்று பாடல் வழியாக கபிலர் பெண்பாலின் நாணச் செவ்வியைப் புலனாக்குகிறார்.*
*நற்றாய்க்குரிய மரபு*

*தலைவியின் தாய், தன் மகள் தலைவனுடன் சென்ற பொழுது கனவு காண்பாள் என்பதை,*

***தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின்***

*என்று தொல்காப்பியத்தின் வழி அறியமுடிகிறது. பொதுவாக கனவு என்டபது தமிழ் மக்களிடையே நெருங்கிய ஒரு நிகழ்ச்சியாகக் கருதப்படுவதாகும். கனவுகளினால் நன்மையும் தீமையும் நிகழக் கூடியதாக அமையும். அந்நிலையில் கனவும் மரபாக பின்பற்றப்பட்டு வருகின்றனவாகும். கனவில் தலைவி யோகமாற் காத்தற்குரியளாதலானும் அவளை என்றும் பிரியாத பயிற்சியானும் செவிலிக்கும் கனவு உரித்தாயிற்று என்று உரை கூறுகிறார். தலைவனொடுத் தலைவியொடும் நற்றாய் கூற்று நிரப்பத் தோன்றாத மரபை,*

***“கிழவன் தன்னொடுங் கிழத்தி தன்னொடும்***
***நற்றாய் கூறல் முற்றத் தோன்றாது”***[12]

*என்று தொல்காப்பியம் தெளிவுப்படுத்துவதன் மூலம் அறியலாம். எனினும் தலைவன் தலைவியொடு கூற்று நிகழ்'துபவள் அன்னையரில் செவிலியே ஆவாள் என்பதைத் தொலி'காப்பியம் உணர்த்துகிறது. மேலும் தொல்காப்பியர் கூறுவது தாய் தன் மகளின்*

*முன்னேற்றத்திற்குப் பல வழிகளிலும் உறுதுணையாக இருந்திருக்கின்றால் என்பதை அறிந்து கொள் முடிகிறது.*

*தாய் என்பவள் அன்புக்குரியவள் தன் கடமைகளை நி8றைவேற்றுபவள் பிறரிடம் எதையும் எதிர்பாராமல் நடப்பவள். தன் குழந்தையின் நல்வாழ்விற்காகவே வாழ்பவள். ஆகவே தாயின் அன்பினைப் போன்று நடந்து கொள்வளான தோழியைத் தலைவி அன்னை என்று கூறுவதும் தலைவியைத் தேழி அன்னை என்று கூறுவதும் இருவரும் சோ'ந்து அன்னை என்று கூறுவதும் மரபாக இருந்தது என்பதை எட்டுத்தொகை அக இலக்கியங்கள் கூறுகின்றன. இதனை தொல்காப்பியர்,*

***"அன்னை என்னை என்றாலும் உளவே***
***தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினுந்***
***தோன்றா மரபின் என்மனார் புலவர்"[13]***

*எனவே தலைவன் தலைவியே அன்னையெனக் கூறுவதும் உண்டு. எனவே மரபு பற்றிய விளக்கத்தை தெல்காப்பியர்,*

***"மரபுநிலை திரிதல் செய்யுட் இல்லை***
***மரபுவழிப் பட்ட சொல்லி னான்"[14]***

*மரபுநிலை திரிதல் செய்யுட்கில்லை. எனவே வழக்கினுள் சில திரிதல் பெறும் என்று இதற்கு விளக்கம் கூறுவர். எனவே தான் வழக்கினை அவை வெவ்வு நிலையில் திரிந்து நிற்கின்றன என்கிறார் தொல்காப்பியர். பொன்னே போல் போற்றப்பட்ட இம்மரபுகளை இளைய சமுதாயத்தினர் எள்ளி நகையாடி வெறுத்து ஒதுக்குகின்றனர். எனினும் முதிய வயதினரின் சொல்லிற்கு இணங்க ஓரிரு மரபுகள் இன்றளவும் மதிக்கப்பட்டு வருகின்றன என்பதையும் இன்றைய நிலையில் பல சடங்குகளின் மூலம் அறிய முடிகிறது.*

*நற்றாய் கூற்று நிகழா இடங்கள்*

*நற்றாய் கூற்று நிகழா இடமாக குறிப்பிடப்படுவன தலைவனொடும் தலைவியொடும் ஆகும். இதனை,*

***"தலைவன் தலைவியொடு நற்றாய் கூறுவாய்"***

*என்ற நூற்பாவழி அறியலாம். அதாவது தலைவனோடும் தலைவியொடும் நற்றாய்க்குக் கூற்று நிகழ்வதில்லை எனலாம்.*

**நற்றாய் கூற்று நிகழ்த்தும் இடங்கள்**

*அகத்திணை உறுப்பினர்களான தலைவன், தலைவி தோழி, செவிலி நற்றாய் போன்றோர்கள் பற்றிய கோட்பாடுகளைத் துறைகளாகக் கொள்ளாமல் மாறாக அவைகள் அப்பாத்திரங்களின் கூற்றாக வைத்தே செயல் நிகழ்ச்சிகளைக் விளக்குகின்றன. நற்றாய் கூற்று நிகழும் இடமாக அகப்பொருள் விளக்கத்தில்,*

***"புணர்ந்து உடன் போயது உணர்ந்த பின்னர்***
***அந்தணர் தெய்வம் அயலோர் அறிவர்***
***சிந்தைநோய் அறிவோர் செவிலி பாங்கியொரு***
***கண்டோர்க்கு உறைக்கும் பண்புடை நற்றாய்"[15]***

*இந்நூற்பா வழி நன்கு அறிய முடிகிறது. அதாவது நற்றாய் கூற்று நிகழும் இடங்களாகத் தலைவனம், தலைவியும் உடன்போக்கு மேற்கொள்வதை அறிந்து, அந்தணர் தெய்வம், அலோர், அறிவிபர் நற்றாயின் மனநோய் அறிவோர் செவிலி, பாங்கி, கண்டோர், ஆகியோருடன் கூறப்படுகின்றன. எனவே அகப்பாடல்களின் பாத்திரங்கள் ஒருவரை நோக்கி ஒருவர் கூறுவன நெஞ்சோடு கூறிக் கொள்வனாக அமைகிறது.*

**முடிவுரை**

*தொல்காப்பியர் தாய் என்றால் நற்றாய்,செவிலித்தாய் என இருவரைக் குறிப்பிடுகிறார். இவர் சுட்டும் இலக்கண மரபுகள் அக இலக்கியங்கள் நற்றாய்க்கும் பொருந்தும் என்றார். அக இலக்கியத்தில் பெற்றத் தாயைக் காட்டிலும் வளர்ப்புத் தாயே குழந்தையின் மீது அதிக அக்கரைக் காட்டியுள்ளதை அறிய முடிகிறது. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற ஔவையார் தாய் என் சொல்லுக்கு நிகரான சொல் தமிழில் வேறு எந்த சொல்லும் கிடையாது என்று அழுத்தமாய் கூறும் ஔவையார் என்பதும் தெளிவாகிறது. மரபு என்பது யாதொரு பொருளை யாதொரு சொல்லால் யாதொரு நெறியால் அறிவுடையார் செ ன்னார்களோ அப்படியே சொல்லுதல் மரபு என்று நம்மால் உணர முடிகிறது. மரபானது தந்தை மரபு, தாய் மரபு என்று ஐ.சிங்காரவேலு வர்கள் இரு மரபை கூறுவதை நம்மால் அறிய முடிகிறது. நற்றாய் கூற்று நிகழும் இடங்களாகத் தலைவனும், தலைவியும் உடன்போக்கு மேற்கொள்வதை அறிந்த நற்றாய் மனகோளுக்கு உள்ளாகின்றாள் என்பதை நற்றாய் கூற்று நிகழ்த்தும் இடங்களில் காணப்படுவதை நம்மால் அறிய முடிகிறது.*

**துணை நிற்கின்ற நூல்கள்**


1. *சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் தொகுதி-1 நற்றினை, குறுந்தொகை, ச.வே.சுப்பிரமணியன்.*
2. *சங்க இலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் தொகுதி-1, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, ச.வே.சுப்பிரமணியம்.*
3. *கடவுள் அறிவியல் (உணர்வுக் கொள்கை) இறையருள் மன்றம் கோ.அன்பழகன்.*
4. *தொல்காப்பியம் எழுத்து, தமிழ் மண் பதிப்பகம் சென்னை.*
5. *சங்க இலக்கியத்தில் உரையாடல் பாரி நிலையம் 184 பிரகாச சாலை சென்னை, 600 108 அமிர்த்கௌரி.*
6. *தொல்காப்பியம், பொருள், அகத்திணை உரைவளம் மதுரை பல்கலைக்கழகம் மு.ப. 1975 அருணாசலம்பிள்ளை.*
7. *சங்க அக இலக்கியம் காட்டும் தாய்மை, ஆய்வுக்கோவை லேடி ஸ்ரீராம் கல்லூரி, புதுதில்லி, இந்திராணிண மணியம்.க.ஆ.*
8. *சங்க அகப்பாடல்களில் கூற்று மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம் மதுரை - 1976, இரத்தினம்.*
9. *இராசராம்.க, சங்க அகப்பாடல்களில் கண்டோர் கூற்று அழகப்பா பல்கலைக்கழம் காரைக்குடி - 1990.*
10. *இராமநாதன், சுப. ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள் கழக வெளியீடு, சென்னை - 1955.*
11. *இராமகிருட்டிணன், ஆ. கலாப்பிரியா கவிதைகளில் அகத்திணை மரபுகள், காவியா டிரஸ்புரம், கோடம்பாக்கம், சென்னை - 24.*

12. இளவழகனார் (உ.ஆ) தொல்காப்பியம் கழக வெளியீடு, 154டிடி கோ. சாலை.
13. பஞ்சாங்கம், க.இலக்கியமும் திறனாய்வும் கோட்பாடுகளும் தஞ்சாவூர் அண்ணம் (பி) லிட் தஞ்சாவூர் - 613000

**References**

1. Subramanian, S.V., Sanga Ilakiyam Ettuthogai Moolamum Thelivuraiyum, Vol.1, Natrinai, Kurunthogai.
2. Subramanian, S.V., Sanga Ilakiyam Ettuthogai Moolamum Thelivuraiyum, Vol. 1, Pathitruppathu, Paripadal, Kalithogai.
3. Anbazhgan, K., Kadavul Ariviyal (Unarvu Kolgai) Iraiyarul Mandam.
4. Tholkappiyam, Ezhuthu, Tamil Maan Pathipagam, Chennai.
5. Amirtha Gowri, Sanga Ilakiyathil Uraiyadal, Paari Pathipagam, 184, Pragasa Salai, Chennai – 600 108.
6. Arunachalam Pillai, M.P., Tholkappiyam, Porul, Agathinai Uraivalam, Madurai University, 1975.
7. Indirani Maniyam, K.A., Sanga Ilakiyam Kaatum Thaimai, Proceedings, Lady Sriram College, New Delhi.
8. Rathinam, Sanga Agappadalgalil Kootru, Madurai Kamaraj University, Madurai, 1976.
9. Rajaram, K., Sanga Agapadalgalil Kandor Kootru, Alagappa University, Karaikudi, 1990.
10. Ramanathan, SP, Iygurunootru Sorpozhivugal, Kazhaga Veliyeedu, Chennai, 1955.
11. Ramakrishnan, A., Kalappriya Kavithigalil Agathinai Marapugal, Kaaviya, Trustpuram, Kodambakkam, Chennai, 600 024.
12. Ilavazhaganaar, Tholkappiyam, Kazhaga Veliyeedu, 154, T.T.K. Salai.
13. Panjangam, K., Ilakiyamum Thiranaivum Kotpadugalum, Thanjavur Annam (P) Ltd., Tanjore – 613000.